**சி.பி.எண்.26/2024 19.12.2025**

**எதிர்மனுதாரர் த.சாட்சி 1 சமில்அகமது குறுக்கு விசாரணை**

20 வருடங்களாக சுஹா லெதர்ஸ் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன் நான் எதிர்மனுதார் நிறுவனத்தில் பணிபுரியவில்லை அது போன்று ஒரு நிறுவனமே இல்லை. ஐ.டி.87/2016 என்ற மனுவை மனுதாரர் தாக்கல் செய்த விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது நாங்கள் வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் எங்கள் வழக்கறிஞரிடம் கொடுத்து விட்டோம். மனுதாரர் தனது மனுவில் தான் வேலைக்கு சேர்ந்த தேதி, அவருக்கு வழங்கப்பட்ட சம்பளம் குறித்த விவரங்கள் தவறானது என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் அவ்வாறு ஒரு நிறுவனமே கிடையாது அதனால் கூறுகிறேன். சுஹா லெதர்ஸ் என்ற நிறுவனம் தான் எங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது சுஹா கார்மெண்ட்ஸ் என்ற நிறுவனமே இல்லை. சுஹா லெதர்ஸ் மற்றும் சுஹா கார்மெண்ட்ஸ் இரண்டு நிறுவனங்களும் ஒரே இடத்தில் தான் இயங்கி வந்தன என்றால் சரியல்ல. இரண்டு நிறுவனங்களுக்கும் ஒரே உரிமையாளர் என்றால் சரியல்ல.

**சான்றளிக்கப்பட்ட பிரதிநிதி கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2025.12.19 16:30:17 +0530